முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 1052

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

16.08.2022, செவ்வாய்கிழமை

1. தர்மஞானியே அரங்கா வாழ்க
தவமாக வாழும் தேசிகா வாழ்க
பெருமை தந்து உலகினை மீட்க
பிரணவக்குடில் படைத்த தேசிகனே வாழ்க
2. வாழ்க என வாழ்த்தி சுப்ரமணியப்பெருமான் யானும்
வழங்குவேன் அரங்கனுக்கு ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் ஆடி மாதம் 31 நாள், 16.08.2022 செவ்வாய்கிழமை)
தாழ்விலா அரங்கன் சன்மார்க்க நெறி
தரணியை காப்பது உறுதி உறுதி
3. உறுதி கொண்டு அரங்கன் செய்யும் தர்மம்
உலகையெல்லாம் ஞான வழி மீட்பது சடுதி சடுதி
கருதியே அரங்கன் திருவடி பற்றி
கவலைகொள்ளா உலகோர் தொடர்ந்து வர
4. வருக வருக ஞான யுகமாற்றம்
வடிவேலன் என் அருள் ஆசியால் நடப்பதும் சடுதி சடுதி
சடுதியே அரங்கன் திருவடி பற்றி
சரணாகதி முழுமைபட கொண்டு வர
5. வருக வையகம் மாறுமப்பா
வடிவேலன் என் வெளிப்பாடும் உறுதியாகும் அப்பா
அப்பனே அரங்கன் வழி வரும் தீட்சை எல்லாம்
ஆற்றல்பட உலகோரை மீட்பதோடு
6. வரங்களாக மாறி கலியுகத்தில்
வல்லமைபட அவர்களெல்லாம் ஞானிகளாகி
ஆகியே ஞான ஆட்சிக் காலம்
அனைவரும் தொடருகின்ற அழியாமை எனும்நிலை
7. நிலை கூடி உலகில் நிலைத்து நிற்பர்
நிலைபெற்ற அரங்கன் தலைமையில்
நிலவுலகம் ஞானஆளுமைக்கு வந்தடையும்
அடையவே அற்புதத்தை அரங்கன் வழி ஆற்றல்பட
8. அனுதினம் சூட்சும சக்தியாக வழங்கி
வழங்கியே ஆறுமுகன் காத்துவருகின்றேன்
வருகின்ற மக்கள் படை மூலமே
வையகம் ஆறுமுகன் என் ஆளுமைக்கு வந்தடையக்கூடும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–